ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2016/6 - 2017 අප්‍රේල් මස 24 වැනි සඳුදා - 2017.04.24

*2016/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

**அரசியலமைப்பின் 155 ஒ ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 155 ஒ உறுப்புரையின் நியதிகளின்படி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அந்த அதிகாரங்களில் சில அதிகாரங்கள் 2016, மே மாதம் 06 ஆந் திகதிய 1965/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் பணிக்கப்பட்டுள்ளதற்கு அமைய பொலிஸ் மா அதிபருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளன. 2017, சனவரி மாதம் 26 ஆந் திகதியிலிருந்து செயல்படும் வண்ணம் அந்த வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணைக்கு பகரமாக பின்வரும் அட்டவணை பதிலீடு செய்யப்படுகின்றது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

பீ. எச். மனதுங்க,
தவிசாளர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகம்,
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம்,
9 ஆம் கட்டிடம்,
கொழும்பு 07,
2017, சனவரி 26.

1A - PG 3801 — 107 (2017/12)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| இல. | நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதிகள் | நிரல் II<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் | நிரல் III<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|
| 1. | பிரதான பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலையங்களின் பொறுப் பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / சேவைப் பிரமாணக் குறிப்புக் களுக்கு அமைவாக பதவிகளுக்கு நியமித்தலும் பதவி உயர்வுகள் வழங்கலும்.<br>(ii) தகுதிகூர் நிலைக் காலப்பகுதியில் நியமனத்தை இரத்துச் செய்தல் அல்லது சேவையை நிறுத்துதல்.<br>(iii) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்.<br>(iv) ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல்.<br>(v) பணித்தடை செய்தல் ;<br>(vi) பதவி வெறிதாக்கல் தொடர்பாக மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல் | பொலிஸ் மா அதிபர் |
| 2. | பிரதான பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலையங்களின் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்.<br>(ii) ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ;<br>(iii) பணித்தடை செய்தல்.<br>(iv) பதவி வெறிதாக்கல் தொடர்பாக மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல். | பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலீஸ்மா அதிபர்கள் |
| 3. | பிரதான பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் | (i) தகுதிகூர்நிலை மற்றும் பதில் கடமை காலப்பிரிவின் பின்னர் பதவி உறுதிப்படுத்தல் ;<br>(ii) சேவையிலிருந்து விலகல் தொடர்பாக கிடைக்கப்பெறும் கடிதங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல். | பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (நிர் வாகம்) |
| 4. | பிரதான பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் | (i) எவரேனுமொரு உத்தியோகத்தரின் அடுத்த நிலைக்கு தரத்திற்கு அல்லது பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னர் ஒரு தடவைக்கு ஒரு வருடம் என்ற அடிப்படையில் ஆகக்கூடியது 03 வருட கட்டாய பதில் கடமை காலத்தை நீடிப்புச் செய்தல். | பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலீஸ்மா அதிபர்கள் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இல. | நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதிகள் | நிரல் II<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் | நிரல் III<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|
| | | (ii) வினைத்திறன் காண் தடை தாண்டலில் சித்தியடையும் தேவைப்பாட்டை நிறைவு செய்யும் பொருட்டு ஒரு தட வைக்கு ஒரு வருடம் என்ற அடிப்படையில் ஆகக் கூடியது 03 வருட தகுதிகூர் நிலைக் காலத்தை நீடிப்புச் செய்தல். | |
| 5. | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைக்கு அமைவாக அந்தந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் நிர்வாக எல்லைக்குள் இடமாற்றம் செய்தல். (பொலிஸ் நிலையங்களின் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த).<br><br>(ii) பதவி நீக்கம் செய்தல் தவிர்ந்த அவர்களது நிர்வாக எல்லைக்குள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்<br><br>(iii) பதவி வெறிதாக்கல் தொடர்பாக மேன் முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல் (பொலிஸ் நிலையங்களின் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் |
| 6. | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கு அமைவாக பிரதி பொலிஸ் மா அதிபரின் நிர்வாக எல்லைக்குள் வரக்கூடிய இடமாற்றங்கள் (பொலிஸ் நிலையங்களின் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த). | பிரதி பொலிஸ்மா அதிபர் |
| 7. | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு ஏற்ப சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I) பொலிஸ் அத்தியட்சகர்களின் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் II) அந்தந்த நிர்வாக எல்லைக்குள்ளான இடமாற் றங்கள் (பொலிஸ் நிலையங்களின் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பிரிவுகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இல. | *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதிகள்* | *நிரல் II*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* | *நிரல் III*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள்* |
|---|---|---|---|
| *8.* | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் | (i) அந்தந்த நிர்வாக எல்லைக்குள் பணித்தடை செய்தல் ;<br>(ii) ஏற்புடைய நிர்வாக எல்லைக்குள் ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் தண் டனை விதித்தல். (பொலிஸ் நிலையங் களின் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், பிரதி பொலிஸ் மா அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I) பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் II) உதவி பொலிஸ் அத்தியட்சகர் |
| *9.* | பொலிஸ் சார்ஜன்ட்கள் மற்றும் கான்ஸ்டபில்கள் | (i) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்ட வணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள்.<br>(ii) பதவி வெறிதாக்கல் தொடர்பான மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல். | பிரதி பொலிஸ்மா அதிபர்கள் |

*5- 220*